DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.383/17

Deposition of Witness: PW 1

Name ராஜேந்திரன் | Father's Name
Village | Taluk
Caste | Calling
Religion | Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.07.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஆண்டிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியும். நான்கு எதிரிகளையும் தெரியும். புகார்தாரின் வீட்டிற்கு அருகில் நான் குடியிருந்தேன். விக்டர் ராஜா ஏற்கனவே இராணுவத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றிருந்தார். எனது மகன்கள் இரண்டு பேரை இராணுவத்தில் சேர்த்துவிடுவதாகவும், அதற்கு காமராஜ், வனராஜ் ஆகியோர் மூலம் பணம் கொடுத்தால் உடனே சேர்த்துவிடுவதாகவும், ஒரு நபருக்கு ரூ.2,05000 வீதம் இரண்டு மகன்களுக்கும் 4,10,000 ம் கொடுத்தால் உடனே சேர்த்துவிடுவதாக கூறினார். ஒரு முறை கோயமுத்தூருக்கு அழைத்து சென்று செலக்சன் ஆகவில்லை என்றும், ஊட்டி வில்லிங்கடன்னில் செலக்சனுக்கு கூப்பிட்டு கொண்டு போய் அங்கு இரண்டு நாள் ரூம் எடுத்து தங்க வைத்தால் அதன் பிறகு தேனிக்கு பஸ்சில் ஏற்றிவிட்டு அடுத்த மறை செலக்சனில் சேர்த்துவிடுவதாக கூறினார். அதற்கு பிறகு 25 நாட்கள் கழித்து வனராஜ் சென்று பார்த்த போது இன்னும் செலக்சனுக்கு தேதி அறிவிக்கவில்லை என்று கூறினார். அதற்கு பிறகு வீட்டிற்கு சென்று கேட்டபோது 1,2 எதிரிகளின் மனைவிகள் சத்தம் போட்டார்கள். அதனால் நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். அதன்பிறகு விக்டர் ராஜாவிடம் சென்று முறையிட்ட போது நடந்தை சொல்லி என்ன செய்ய என்று கேட்டபோது அவர் தான் கேட்டுக்கொள்வதாக கூறினார். அதற்கு பிறகு வீட்டிற்கு சென்று பார்த்த போது வீட்டில் ஆள் இல்லை எங்கோ போய்விட்டார்கள். அதற்குபிறகு நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். நான் எனது மகன்கள் விக்டர் ராஜாவை கூப்பிட்டு கொண்டு போய் புகார் கொடுத்தோம். அன்றையதினம் 4, 5 நபர்கள் பணம் கொடுத்து ஏமாந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு 4,5 முறை காவல்நிலையத்தில் பார்த்த போது அவரை கண்டுபிடிக்கமுடியவில்லை. இரண்டு முறை பெண்கள் எங்களிடமும் அவர் பணம் கொடுத்துவிட்டாரா என்று கேட்டார்கள் அதற்கு பிறகு வனராஜை கண்டுபிடித்து விசாரித்த போது அவர் 1 வாரத்தில் பணம் கொடுப்பதாக சொன்னார். அதற்கு பிறகு எங்கு சென்றார் என்று தெரியவில்லை. ரூ.4,10,000 ம் வாங்கி கொண்டு பணத்தை கொடுத்தாயிற்று என்று சொல்லி போ பா என்று சொல்லிவிட்டார்கள். வனராஜ் இரண்டு முறை தலைமறைவாகிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு விக்டர்ராஜா என்பவரை தான் நேரடியாக தெரியும் என்றாலும் எதிரிகளை நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். இராணுவத்தில் ஆள்சேர்ப்பிற்கு பேப்பர் விளம்பரம் எதுவும் நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. எனது மகன்களும் பேப்பர் விளம்பரம் எதையும் பார்த்து கூறவில்லை. பணம் கொடுத்தால் தான் இராணுவத்தில் வேலை கிடைக்கும் என்ற விபரத்தை விக்டர் ராஜாதான் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். விக்டர் ராஜா எதிரி வனராஜ் என்பவரை எந்த வருடத்தில் எனக்கு அறிமுகப்படுத்தினார் என்றால் 2008 ம் வருடம் அறிமுகப்படுத்தினார். நான் பணம் கொடுத்த சமயத்தில் விக்டர்ராஜா அங்கு இருந்தாரா என்றால் இல்லை. எந்த தேதி வருடத்தில் பணம் கொடுத்தேன் என்றால் 2008 ல் கொடுத்தேன். தேதி, மாதம் ஞபாகம் இல்லை.

நான் பணம் கொடுக்கும் சமயம் எதிரிகள் தவிர வேறு 3ம்நபர்கள் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. எனது மகன்களின் படிப்பு சம்மந்தப்பட்ட விரபங்களை எதிரியிடம் கொடுத்தேன். விண்ணப்ப படிவம் எதுவும் பூர்த்தி செய்து கொடுத்தேனா என்றால் எனது மகன்களை அவர் அழைத்து சென்றார் விண்ணப்ப படிவம் கொடுக்கப்பட்டதா என்பது எனக்கு தெரியாது. எதிரி என் மகன்களை கோயமுத்தூருக்கு செலக்சனுக்கு அழைத்து செல்லும் போது அவர்களுடன் 5,6 நபர்கள் சென்றார்கள். 5,6 நபர்களுடன் அவர்களது பெற்றோர்களும் சென்றார்கள் என்றால் சரிதான். ஊட்டிக்கு எனது மகன்களை எந்த தேதியில் அழைத்து சென்றார் என்றால் 2008ம் வருடம் 45 நாட்கள் கழித்து அழைத்து சென்றார். எந்த தேதியில் எதிரியின் வீட்டில் சென்று பணத்தை நான் திரும்ப கேட்டேன் என்றால் 9வது மாதம் 2008ல் கேட்டேன். எதிரிகளின் மீது நானோ எனதுமகன்களோ தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் விக்டர்ராஜா மூலமாக கொடுத்தோம் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. மற்ற நபர்கள் கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. விக்டர் ராஜா மூலமாக கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் மீது ஆரம்பத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் புகார் கொடுத்தவுடன் காவல்துறையில் வழக்கு பதிவு செய்துவிட்டார்கள். நான் சொன்னது போல் எதிரகளிடம் ரூ.4,10,000ம் கொடுக்கவில்லை என்றாலும் நான் விக்டர் ராஜா என்பவரிடம் பணத்தை கொடுத்துவிட்டு விக்டர் ராஜாவுடன் சேர்த்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கேற்ப பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விக்டர் ராஜா தான் வேலை வாங்கி தருவதாக பலநபர்களிடம் பணத்தை பெற்று மோசடி செய்துவிட்டார் என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரிகளிடம் பணம் கொடுத்திருந்தால் விக்டர் ராஜா மீது சேர்த்து புகார் கொடுத்திருப்பபேன் என்றும் அவர் மீது புகார் கொடுக்காததிலிருந்தே இது பொய் வழக்கு என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.